## **ஜாம** (Divisions of the day)

ஜாம கிண்0டி - காலமானி, நாழிகைவட்டில். இதை வைத்துப் பார்த்தால் ஜாம என்பது நாழிகையைக் குறிக்கும் எனக் கொள்ளலாம். அப்படியானால் ஜாம (நாழிகை) – 24 நிமிடம்; 2 ½ ஜாம - ஒரு மணி; 60 ஜாம - 24 மணி அல்லது ஒரு நாள். ஜாம நாளின் சிறு பகுதியைக் குறிக்கும்.

ஜாமத்தைக் குறிக்கும் சில ஆட்சிகள்:
ஹக்கி ஆ0ப்0ப ஜாம - பறவை ஒலி எழுப்பும் நேரம், விடியல் நேரம்
காநாகோயி ஜாம - விடிந்து விடியாத நேரம்
0பா0கு ஜாம - விடியல் நேரம்

ஹொத்து உட்டோ ஜாம - ஞாயிறு உதயமாகும் நேரம், காலை
ஹொத்து க0டவ ஜாம - ஞாயிறு தோன்றுங்காலம், காலை
ஹிட்டு ஜாம - உணவு நேரம்
ஹ0கலு ஜாம - பகல் பொழுது
ஹசு ஜாம - பசிக்கும் (பகல்) வேளை
எ0டெஜாம - இடைப்பட்ட நேரம்

ஹொத்து 0பு0ப்0ப ஜாம - ஞாயிறு மறையும் நேரம், மாலை
ஒர0குவ ஜாம - உறங்கும் நேரம்
இருஜாம - இரவு நேரம்
ஒல்ல0த ஜாம - கெட்ட நேரம்
ஒள்ளிய ஜாம - நல்லநேரம்

கோயி ஜாம – கோழி (சேவல்) கூவும் நேரம் , அதிகாலை சுமார் 4.30 மணி. கோயி ஜாமத்தை எத்து கடசி மீநு, ஆரலு மீநு, ஆகியவற்றின் துணைகொண்டு அறிய வேண்டும்

எத்து கடசி மீநு – வானின் வடகோணத்தில் தோன்றும் எருது எழும்புவது போன்ற தோற்றத்திலுள்ள ரிஷப நட்சத்திரம் (Taurus). இதனைத் தொடர்ந்து ஆரலு மீநு வரும்

ஆரலு மீநு – ஆறு மீன் (Ursa Major). இதனைக் கரடி நட்சத்திரம் என்றும் சப்தரிஷி கூட்டம் என்றும் அழைப்பர்..

கோயி ஜாமத்தைத் தொடர்ந்து "ஹொத்து உட்டுவ ஜாம" (பொழுது புலரும் நேரம்) வரும். இதைப் பெள்ளிய மீநு, படிக்கார மீநு ஆகியவற்றின் துணைகொண்டு கணக்கிடவேண்டும்.

0பெள்ளிய மீநு – சுக்கிரன், விடிவெள்ளி (Venus). இதனைத் தொடர்ந்து வருவது படிக்கார மீநு (crystal like star).

ஹொத்து உட்டுவ ஜாமத்தைத் தொடர்ந்து வருவது “மூடெ 0பீகுவ ஜாம.”

மூடெ 0பீகுவ ஜாம – கிழக்கில் ஒளி புலரும் நேரம். இதன் பின் ”ம0ப்0பு தீய” வேண்டும் அதாவது கருக்கல் நீங்க வேண்டும். இதன் பின்னரே 0பாகு (விடியல்).